**தலைப்பு 051 – டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2 மற்றும் 1.6.3(அ) பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தீர்க்கப்பட வேண்டிய மீதி அத்திகதியில் காசேட்டில் குறிப்பிடப்பட்ட மீதிக்கு சமமான பெறுமதியொன்றைக் கொண்டிருக்காமையால் அந்த மீதியை இணக்கம் செய்வதற்காக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்கில் பின்வரும் சீராக்கங்கள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் வரவு வைக்கப்பட்ட செலவினம் ரூபா 31,527,238 ஆக இருந்த போதிலும் அது ரூபா 31,526,733 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | முற்பணம் கணக்கு ‘‘பீ’’ வரவாக ரூபா 13,317,998 தொகையும், செலவாக ரூபா 8,171,750 தொகையும் ஆக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி முறையே ரூபா 16,433,008 மற்றும் ரூபா 11,131,063 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் புத்தகங்களின் பிரகாரமும் முற்பண ‘‘பீ’’ கணக்கிற்குரிய திறைசேரி கணனி அறிக்கையின் பிரகாரமும் இணக்கம் செய்யப்படாமைகள் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். | முற்பணம் ‘‘பீ’’ கணக்கில் வரவு மீதியாக 051012 இன் கீழான கொடுக்கல் வாங்கல்களே குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | பொது வைப்பு கணக்கின் பெறுவனவாக ரூபா 10,916,507 தொகை குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், அப்பெறுமதி ரூபா 11,874,704 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பொது வைப்புக் கணக்கில் கொடுப்பனவாக கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு வைக்கப்பட வேண்டிய மீதியில் காணப்படாதிருந்த போதிலும் அது ரூபா 542,625 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் புத்தகங்களின் பிரகாரமும் பொது வைப்பிற்குரிய திறைசேரி கணனி அறிக்கையின் பிரகாரமும் இணங்காமைகள் உள்ளடக்கப்பட வேண்டும். | பொது வைப்புக் கணக்கில் குறுக்குப் பதிவு பெறுவனவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | செலவினத் தலைப்பு 194 இல் 051 தலைப்பிற்கு மாற்றப்பட்டு செலவினமாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 3,936,980 தொகை மற்றும் பெறுவனவாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 36,144 தொகைகள் என்பன சீராக்கக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கட்டுநிதி சீராக்கக் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | இந்த அமைச்சின் செலவின தலைப்பின் 194 இன் கீழ் காணப்பட்ட காலத்தில் 194 செலவின தலைப்பில் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் பெறுவனவாக ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை சீராக்கக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (உ) | சீராக்கக் கணக்கிற்கு உரித்தற்ற ஏனைய பெறுவனவாக ரூபா 1,422,869 தொகை குறைக்கப்பட்டிருந்தது. | சரியாக கட்டுநிதி சீராக்கக் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | ஏனைய பெறுவனவுகளின் மொத்த தொகை ரூபா 1,952,403 ஆகும். இதில் பணமாக கிடைத்தவை ரூபா 529,534 ஆகும். சேமிப்பு சீராக்க கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் சேகரிக்கப்பட்ட வருமானம் அல்லாத ஏனைய பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,666,390 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 1,952,403 ஆக ரூபா 713,987 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இதன் கீழ் ஏனைய வருமான தலைப்பின் கீழ் கிடைத்த வருமானம் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் சரியான கூட்டுத் தொகை காண்பிக்கப்பட வேண்டும். | ஏனைய பெறுவனவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் நானாவித வருமான தலைப்பின் கீழ் கிடைத்த வருமானம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வருமானமல்லாத பெறுவனவாக ரூபா 2,666,390 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 529,534 ஆக ரூபா 2,136,856 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து கிடைத்த சரியாக கணிப்பீடு செய்யப்பட்ட வருமானம், வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வருமானமல்லாத பெறுவனவாக காசாக மாத்திரம் வருமானத் தலைப்பிற்காக கிடைத்த வருமானம் மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சிலின் கீழ் ஆளனி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்கான பணச்செலவிடுதலாக ரூபா 437,166,604 தொகை காசுப் | வகைப்படுத்தலை சரியாக மேற்கொண்டு உள்ளபடியாக நிலைமை காசுப் பாய்ச்சில் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். | காசுப் பாய்ச்சில் கூற்றில் ஆளணி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களை உள்ளடக்கி பிரதான வகைப்படுத்தலின் கீழ் ஏனைய வகைப்படுத்தல்களுக்குரிய செலவினங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 1,647,930,146 ஆக ரூபா 1,210,763,542 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | எனினும் மொத்த காசுப் பாய்ச்சல் கூற்றிலும் நிதி வெளிப் பாய்ச்சல்களில் மொத்த பெறுமதிக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வில்லை. |
| (இ) | முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சிலின் கீழ் முற்பண அறவிடலாக ரூபா 3,170,128 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 210,815 ஆக ரூபா 2,959,313 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br>முற்பண செலுத்துதல்கள் ரூபா 5,641,991 ஆக இருந்த போதிலும் அது ரூபா 2,526,921 ஆக குறைவாக காசுப் பாயச்சல் கூற்றில் காசு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டடிருந்தது. | முற்பணத்தை அறவிடல் மற்றும் செலுத்தல்களாக காசாகவும் குறுக்கு பதிவுகளாகவும் கூட்டுத்தொகை காண்பிக்கப்பட வேண்டும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றமையால் காசாக அறவிடல் மற்றும் கொடுப்பனவுகள் மாத்திரம் முற்பணங்களை அறவிடுதல் மற்றும் செலுத்துதல்களின் கீழ் பதியப்பட்டுள்ளது. |
| (ஈ) | முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு செலவிடல்களின் கீழ் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு கைப்பற்றல்கள் ரூபா 1,398,842,481 ஆக இருந்த போதிலும் அது ரூபா 183,740,445 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகள் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். | காசாக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (உ) நிதிச் செயற்பாடுகளின் கீழ் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வைப்புப் பெறுவனவுகள் ரூபா 3,853,656 தொகை மற்றும் வைப்பு செலுத்துதல்கள் ரூபா 13,020,957 தொகை என்பன காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது முறையே ரூபா 2,393,826 மற்றும் 12,418,462 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சுப் புத்தகங்களின் பிரகாரம் வைப்புக் கணக்குகளின் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை மற்றும் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை என்பன காண்பிக்கப்பட வேண்டும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமையால் வைப்புப் பெறுவனவுகள் மற்றும் செலுத்துதலாக காசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன. |

### 1.6.4 கட்டுநிதி கணக்கு

-------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரிக்கு மீள அனுப்பப்பட்ட ரூபா 1,500,000 தொகையான கட்டுநிதி, கட்டுநிதி கணக்கில் குறிப்பிடப்படாதிருந்தமையின் காரணமாக கட்டுநிதிக் கணக்கு அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மீள அனுப்பப்பட்ட கட்டுநிதி கணக்கின் மீதியில் குறைத்தலாக பதியப்பட வேண்டும். | சனவரி மாதத்தின் போது பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 1,500,000 தொகை மீண்டும் அந்த மாதத்தின் போதே திறைசேரிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி கணக்கு திறைசேரிக் கணக்கின் குறிப்புகளின் பிரகாரம் சமப்படுத்தப்பட்ட மீதி ரூபா 0 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 1.6.5 எல்லையினை விஞ்சியமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 118 இன் 2.1 இன் பிரகாரம் எல்லை பின்பற்றப்பட வேண்டிய போதும் இந்த அமைச்சு ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையினை அடைந்திருக்கவில்லை. அவ்வாறு அடையாதிருந்த தொகை ரூபா 1,100,899 ஆக இருந்த போதிலும் வருடாந்த இணக்கக் கூற்றில் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 1,300,000 ஆக காண்பிக்கப்பட்டு எல்லையை விஞ்வியமை அல்லது வீழ்ச்சியடையாதிருந்தமை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளில் சரியான நிலைமை காண்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் எல்லையை விஞ்சுவதற்கு முன் அந்த எல்லையை விஞ்சுவதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையை திருத்துவதற்கான விண்ணப்பப் பத்திரம் திறைசேரிக்கு 2019 ஆம் ஆண்டின் போதும் அனுப்பப்பட்டதுடன் அது பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. |

**1.6.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் ஆக்கபூர்வமாக உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவின விடயங்கள் 01 இற்கும் 02 மூலதன செலவின விடயங்களுக்கும் வருடத்தில் | ஆண்டின் போது கிடைக்கக் கூடிய நிதி அளவிற்கு | கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேதிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| திட்டமிட்ட பிரகாரம் திறைசேரியினால் கட்டுநிதி விநியோகிக்கப்படாமையினால் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட ரூபா 1,533,438,050 தொகையான நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மாத்திரம் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிகை நிதி ஏற்பாடு கிடைக்கப் பெற்றமையின் காரணமாக 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 08 மூலதன செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 10,381,559 தொகை அதாவது, 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | சரியான பிரகாரம் ஆரம்ப திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு தேவையான அளவில் மாத்திரம் நிதி ஏற்பாடு பெறப்பட வேண்டும். | தேவை ஏற்பாடாதிருந்தமை, ஆரம்ப திட்டம் மாற்றப்பட்டிருந்தமை மற்றும் பல்வேறு பிரச்சினைகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்ததன் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

-----------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் பொறுப்பு மீதி ரூபா 364,859,701 ஆக இருந்த போதிலும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அது ரூபா 365,381,841 ஆனமையால் ரூபா 522,139 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வழுக்களை இனங்கண்டு சரியான தகவல்கள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பொறுப்புக்களின் அறிக்கை அச்சிடல் வழுக்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறான வழுக்கள் இடம் பெறாமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 04 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் உரித்தாக வேண்டிய 10 செயற்திட்டங்களில் 04 செயற்திட்டங்கள் நூறு சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. |

### 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எல்லோருக்கும் டிஜிட்டல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அமைச்சின் பிரதான பணியாக இருந்த போதிலும் பின்வரும் விடயங்களின் பிரகாரம் தேவைகள் நிறைவேற்றப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | | |
| (அ) 2019 ஆம் ஆண்டு வரையும் கையடக்கத் தொலைபேசி நபர்கள் 100 சதவீதம் முதல் 150.8 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டிலுள்ள பாவனையாளர் மொடியூல் பத்தரம் ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் தனிநபர்களினால் பயன்படுத்தப்படுகின்றமையால் கையடக்க தொலைபேசி | ஒரு நபருக்கு விநியோகிக்கப்பட்ட சிம் காட்டின் அளவு தொடர்பாக முறையான திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் கையடக்கத் தொலைபேசி தொகுதியை அளவிடுவதற்காக | ஒரே நபருக்கு தொடர்பு ஒன்றிக்கு மேற்பட்ட அளவில் வைத்துக் கொள்ளப்பட வேண்டியமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனினும், இந்த காரணத்தை அளவிடுவதற்காக மிகவும் சரியான குறிகாட்டியொன்றை இனங்காண்பதற்கு ITU கவனத்தில் கொண்டுள்ளது. அவ்வாறு இலங்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகுதியின் அதிகரிப்பு நிச்சயமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியான குறிகாட்டியொன்று இனங்காணப்பட வேண்டும். | தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் மூலம் ஒரு நபருக்கு விநியோகிக்கப்பட்ட சிம் பத்திரத்தின் அளவு தொடர்பாக நிர்ணயிக்கப்படுகின்றது. |
| (ஆ) | இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் இணையதள பாவனையாளர்களின் எண்ணிக்கை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே 6,747,154 , 10,562,675 மற்றும் 13,408,403 ஆக இருந்த போதும் அந்த அளவில் பிரதேச ரீதியில் பரவலாக்கம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | இலங்கையின் இணையதள பரவல் சனத்தொகை மற்றும் பூகோள ரீதியான ஒப்பீட்டின் போது பிரதேச பயன்பாடு கீழ் மட்டத்தில் காணப்பட்டமையால் அதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் மற்றும் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இணையதள பயன்படுத்துனர்களின் எண்ணிக்கையை சரியாக கணிப்பிடுவதற்காக பொருத்தமான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளை ஒப்பீடு செய்யும் போது 61 சதவீதத்திற்கு மேற்பட்ட இணையதள சேவை தொகுதியொன்று காண்பிக்கப்பட்டதுடன் தூர வலய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் அந்த பெறுமதி மிகவும் உயர்ந்ததாகும். வருடாவருடம் இணையதள சேவையை பயன்படுத்துபவர்களின் அளவு அதிகரிக்கின்ற போக்கைக் காணக்கூடியதாக உள்ளது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டு வரையில் ADSL இணையதள வசதிகளை பெறக்கூடிய அளவு 908418 மாத்திரமாக இருந்தது. இதில் 42.66 சதவீதம் மேல் மாகாணத்திலும், 0.46 சதவீதம் முதல் 31.18 சதவீதம் வரையிலான அளவு ஏனைய மாகாணங்களுக்கிடையே பரவலாக காணப்பட்டமையினால் கிராமிய பிரதேசங்களில் ADSL இணையதள சேவையின் | சகல மாகாணங்களுக்கும் இணையதள வசதிகளை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ADSL பயன்பாட்டை விட வேகமானதும் மற்றும் மிகவும் தரமானதுமாக பயன்படுத்தக்கூடிய இணையதள ஊடகமாக வெளியிடப்பட்ட பார்வை தொழில்நுட்பம் (Optical Fiber Technology) தொடர்பில் சேவை வழங்குனர்கள் தொடர்புபட்டிருந்ததுடன் அதற்காக தேவையான ஒழுங்கு விதிகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | பரவலாக்கல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | | தொடர்பான வசதிகளை வழங்குதல் TRCSL மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஈ) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 3,449,391 தொகையான நிலையான தொலைபேசி அளவுகள் சீராகக் குறைவடைந்து 2019 ஆம் ஆண்டு வரையில் 2,299,767 ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் இணையதள வசதிகளுடன் நிலையான தொலைபேசி அளவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலையான தொலைபேசி மூலம் நிலையான புரோட்பேண்ட் பாவனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக மக்களை தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கையின் சகல மாகாணங்களுக்கும் புரோட்பேண்ட் இணையதள தொடர்பினை விரைவாக வழங்கும் நடவடிக்கையாக TRCSL இனால் ''கமட்ட சன்னிவேதனய'' என்ற பெயரில் செயற்திட்டமொன்றும் இணையதளத்ததை விட ஆக்கபூர்வமாக பயன்படுத்தும் வகையில் தேவையான தெளிவூட்டும் செயற்திட்டம் சிலவற்றை அமுல்படுத்தியுள்ளது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாவனையாளர்களின் பங்களிப்பு பெறப்பட்டு சகல மாகாணங்களுக்கும் இணையதள செயற்திட்டத்தை விருத்தி செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | ஐக்கிய நாடுகளின் அமைப்பில் அபிவிருத்தி தொடர்பான ஈ - அரசாங்க மெய்மெய்யாய்வு அறிக்கையின் (United Nations E – Government Survey) பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது 192 தொகையான இலங்கை ஈ -அரசாங்க அபிவிருத்தி குறிகாட்டி 2014 ஆம் ஆண்டின் போது 74 வரை அதிகரித்திருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது இந்த குறிகாட்டி 85 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | ஈ - அரசாங்க அபிவிருத்தி குறிகாட்டியில் இலங்கையின் பூகோள அமைவிடம் மற்றும் குறிகாட்டியின் போதியளவான நிலைமை உயர்ந்த மட்டத்தில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஈ - அரசாங்க கொள்கைக்காக அங்கீகாரம் பெறப்பட்டு அது செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான ஈ - அரசாங்க மெய்மெய்யாய்வு, அறிக்கையின் ஈ -அரசாங்க அபிவிருத்தி குறிகாட்டியின் பிரகாரம் இலங்கையின் இடத்தினை உச்ச அளவில் கொண்டு வருவதற்கு ஏனைய நாடுகளில் செயற்படு நிலைமைகள் தாக்கமளித்திருந்ததுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கை தெற்காசியாவில் முதலாவது நாடாகவும் மொத்த ஆசியாவில் 24 இடத்தையும் பிடித்திருந்தது. ICTA நிறுவனத்தினால் நிரந்தரமாக மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டதன் மூலம் உள்ளக நிறுவன மட்டத்திலும் நிறுவன மட்டத்திலும் ஈ - சேவையினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் ஈ - அரசாங்க பிரிவின் நடவடிக்கைகள் மிகவும் முறையாகவும், நிலைபேறாகவும் அமைத்துக் கொள்வதற்கு நாளது வரையாக்கப்பட்ட ஈ - அரசாங்க கொள்கையை அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் பாடசாலைகளுக்காக கணனிகள் மற்றும் கணனி உப பாகங்களை கொள்வனவு செய்வதற்காக அமைச்சிக்கு ரூபா 1,055 மில்லியன் தொகை வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் நிதி செயல் முன்னேற்றம் 53 சதவீதம் மாத்தரமாகக் காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் ஆண்டுக்காக கிடைக்கப் பெற்ற நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குதலின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றான ஈ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்திற்குரிய 2019 ஆம் ஆண்டின் போது மென் பொருளை கொள்வனவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாண்டின் போது உரிய வழங்குனருக்கு 20 சதவீத முற்பணத் தொகை செலுத்துவதற்கு முடியாததன் அடிப்படையில் மென்பொருளை கொள்வனவு செய்தல் இடம் பெற்றிருக்கவில்லை. ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயல் முன்னேற்றமும் குறைவதற்கு அது காரணமாக இருந்தது. அவ்வாறே அவ்வாண்டின் இறுதியில் விடயப் பொறுப்பு அமைச்சின் மாற்றங்களின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| | | செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்ட பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை விரைவாக எடுக்க முடியாதிருந்தது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது தேவையான குறிகாட்டிகள், திருப்புமுனைகள் மற்றும் உரிய பணிகளை நிர்ணயிப்பதற்காக திட்ட முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உரிய பணிகளை நிர்ணயிப்பதற்காக திட்ட முறைமையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். | அமைச்சில் காணப்படுகின்ற மனித வள பற்றாக்குறையின் காரணமாக அந்தந்த செயற்திட்டங்களின் கீழ் மிகவும் முறையானதும் அடுத்தடுத்த பின்தொடர் நடவடிக்கைகளையும் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு சாரதிகள் மற்றும் இரண்டு அலுவலக ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்குப் புறம்பாக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளாது ஒப்பந்த அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்டிருந்தார். | அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் நிரந்தர அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விஞ்சி ஊழியர்களை சேர்க்க முடியாது. | டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் (அமைச்சரவை அல்லாத) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சாரதிகளின் எண்ணிக்கை 09 ஆகவும் அலுவலக ஊழியர் சேவையின் பதவிகள் 08 ஆகவும் காண்பிக்கப்பட்டு குறைக்கப்பட்டிருந்தது. இது வரையில் மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதனால் 02 சாரதிகள் 02 அலுவலக உதவியாளர் பதவிகள் மிகையாக காணப்பட்டன. |